**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII /XXV Code of Criminal Procedure / BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.748/2025 | Date | : 20.05.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.4 | Taluk | : |
| Name | : **முத்து** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.05.2026

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். ).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் சூரம்பட்டி கிராமடையில் ஒன்றாவது வீதியில் குடியிருந்து, பீடா கடை வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் எஸ் கே சி ரோட்டில் நடந்து சென்ற போது அங்கு தெற்கு போலீசார் நின்றிருந்தார்கள் என்னிடம் ஒரு வெற்றுத்தாளில் இரண்டு கையொப்பங்கள் வாங்கினார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சுஜித் சாம்சன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ 6 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் விசாரித்த போது இவ்வாறு தான் சொன்னேன்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-**

கடந்த 30.04.2024 ஆம் தேதி மாலை 03:30 மணியளவில் நானும் சிவகுமார் என்பவரும் EBN ரோட்டில் உள்ள பெரியார் நகருக்கு வந்தோம் என்றால் இல்லை. அப்போது ஈரோடு தெற்கு போலீசார் அங்கு சுஜித் என்கின்ற சுஜித் சாம்சன் என்பவரை பிடித்து எங்கள் முன்னிலையில் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் இல்லை. அப்போது அவர் அவருடைய பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த அரைப்பவுன் தங்க தோடை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜரில் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் இல்லை. நான் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது ஆஜர் எதிரி யார் என்று தெரியாது என்று எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.05.20 17:13:50 -0800

Judicial Magistrate No.III,

Erode.